Registered as a Newspaper

NIRU TUITION CENTRE
Station Road,
Kondavil.
புதிய பழைய
பாடத்திட்டத்திற்கான
G.C.E. (A/L)91
கலை, வர்த்தக, விஞ்ஞான
வகுப்புக்கள்
ஆரம்பமாகிவிட்டன.

# உதயன்

விலை
ரு 2.50

NIRU TUITION CENTRE
Station Road,
Kondavil
G.C.E. (O/L) 89
பகல் நேர வகுப்புக்கள்
ஆரம்பமாகிவிட்டன.
விபரங்களுக்கு:
— நிர்வாகி

சுடர் 4 விபவ ஞூ பங்குனி மீ 08 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1409 ஷஃபா பிறை 12 (21 - 03 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-90

# யாழ்., திருகோணமலைக்கு தனித் தொலைபேசி வசதி

## ஜப்பானிலிருந்து உபகரணங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 21

**யாழ்ப்பாணத்திலும், திருகோணமலையிலும் கேட்டுப் பெறும் "சுவிச்போர்ட்" முறைத் தொலைபேசிச் சேவை அறிமுகப்படுத்தப்பட உள்ளது.**

**அதன்மூலம் உள்ளூர், வெளிமாவட்ட, வெளிநாட்டுத் தொலைபேசிவசதியை மக்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேனும் பெற முடியும் என்று தொலைத்தொடர்புத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.**

தனித் தன்னியக்க தொலைபேசிப் பரிவர்த்தனை (Private Auto Branch Exchange) இயக்கக் கருவிகளை ஜப்பானில் உள்ள நிறுவனம் ஒன்றிடம் இருந்து கொள்வனவு செய்வதற்கும் தொலைத்தொடர்புத் திணைக்களம் ஒப்பந்தம் செய்துவிட்டது என்ற தகவலும் தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலைக்கு உரிய கருவி எந்த நேரமும் வந்து சேரலாம் என்றும், யாழ்ப்பாணத்துக்கான கருவியும் விரைவில் கிடைக்கும் என்றும் தொலைத்தொடர்பு வட்டாரங்கள் எதிர்பார்த்திருக்கின்றன.

இரண்டு மாவட்டங்களிலும் ஆரம்பத்தில் தலா நூறு தொலைபேசி இணைப்புக்கள் [லைன்கள்] வழங்கப்படும் என்றும் பின்னர் காலகெதியில் அதிகரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தொலைபேசி இணைப்பு முறையின் கீழ் உள்ளூர் அழைப்புகளை நேரடியாகச் சுழற்றிப் பேசலாம்.

வெளிமாவட்டங்களுக்குப் பேச வேண்டுமானால், பரிமாற்று நிலையத்திடம் (Exchange Switch Board) கேட்டு, அதன் ஊடாகவே குறிப்பிட்ட தொலைபேசி இலக்கத்துக்குப் பேசலாம்.

வெளிநாடுகளுக்கான தொலைபேசி அழைப்புகளை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பெறுவதற்கான வசதியும் படிப் படியாகச் செய்யப்படும்.

எனினும் சம்பந்தப்பட்ட கருவி வந்த பின்னர், மிக முக்கிய அலுவலகங்களுக்கு மட்டும் யாழ் - கொழும்பு நேரடி அழைப்பு வசதியைச் செய்து கொடுப்பது குறித்து ஆராயப்படும் என்று தொலைத்தொடர்புத் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

ஆரம்பத்தில் நகரப் பகுதிகளில் உள்ள பிரதான அலுவலகங்களுக்கும், தபாலகங்களுக்குமே நூறு லைன்களும் பொருத்தப்படும் என்றும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெயலலிதா மீது வழக்குத் தாக்கல்

சென்னை, மார்ச் 21

அ. தி. மு. க. பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதா மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களின்பேரில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

இதனைச் சென்னை பொலீஸ் கமிஷனர் திரு பி. துரை நேற்றுச் செய்தியாளரிடம் வெளியிட்டார்.

★ கட்சிக்காரர்கள் கொடுத்த பணத்தைக் கையாடல் செய்தது.
★ மிரட்டியது.
★ கொலை செய்ய முயற்சித்தது.

— ஆகிய பல்வேறு குற்றச்சாட்டுக்களின் கீழ் செல்வி ஜெயலலிதா, தற்போது நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ள ஜெயலலிதாவின் ஆலோசகர் நடராஜன் உட்பட மொத்தம் 6 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. (ஒ-எ)

## பொலீஸார் குறித்து ஜெயலலிதா முறைப்பாடு

சென்னை, மார்ச் 21

அ. தி. மு. க. பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதா நேற்று தமிழ்நாடு ஆளுநர் டாக்டர் அலெக்ஸாண்டரைச் சந்தித்து விண்ணப்பம்ஒன்றை சமர்ப்பித்தார்.

"சென்னை பொலீஸார் அத்துமீறி நடக்கின்றனர். எனது பணியாளர்கள் நியாயமின்றி கிரிமினல் வழக்குகளில் பொய்யாகச் சம்பந்தப்படுத்தப்பட்டிருக்கின்றார்கள்.

"ஆளுநர் இது விஷயத்தில் தலையிடவேண்டும். இதனை மத்திய அரசுக்குத் தெரிவிக்க வேண்டும்" — என்று ஜெயலலிதா தனது முறைப்பாட்டில் தெரிவித்திருக்கின்றார். (ஒ-எ)

## பிரதமர் ராஜீவுக்குத் தந்தி

சென்னை, மார்ச் 21

அ. தி. மு. க. பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதா நேற்றுப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்தார்.

'எதிர்க் கட்சித் தலைவர் பதவியில் இருந்து என்னை வெளியேற்ற முயற்சிக்கப்படுகிறது. பிரதமர் இதில் குறுக்கிட்டுச் செயல்படவேண்டும்'. — இப்படிப் பிரதமருக்கு அனுப்பிய அவசரத் தந்தியில் ஜெயலலிதா விண்ணப்பித்துள்ளார். (ஒ-எ)

## வரதராஜப்பெருமாள் ராஜீவுடன் விரிவாகபேசுவார்

புதுடில்லி, மார்ச் 21

வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாள் இன்னும் இரண்டொரு தினங்களில் பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்து விரிவான பேச்சுக்கள் நடத்த இருப்பதாக புதுடில்லிச் செய்திகள் தெரிவித்தன.

திரு. வரதராஜப்பெருமாள் கடந்த சனிக்கிழமை பிரதமர் ராஜீவ் காந்தியை சில நிமிடங்கள் மட்டுமே சந்தித்துப் பேசினார்.

புதுடில்லிக்கு அருகில் திபெல் என்னும் இந்திய விமானப்படையின் போர்த் திறன் காட்சி நடந்தது. அதைப் பார்க்கப் பிரதமர் காந்தி சென்றிருந்தார்.

அப்போதே பிரதமர் காந்தி - முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் சந்திப்பு இடம் பெற்றது. (ஒ-எ)

## குடத்தனைப் பகுதியில் ஞாயிறன்று மோதல்

### மூன்று இளைஞர்கள் மரணம்

வல்வெட்டித்துறை, மார்ச் 21

குடத்தனைக்கும் மணற்காட்டிற்கும் இடைப்பட்ட பகுதியான கல்வெட்டையில் நேற்று முன்தினம் (ஞாயிறு) இரு கோஷ்டிகளுக்கு இடையே மோதல் இடம்பெற்றது.

இரு கோஷ்டியினரும் பரவலாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதில் ஒரு கோஷ்டியைச் சேர்ந்த மூவர் மரணமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இம் மூவரது சடலங்களையும் இந்திய அமைதிப் படையினர் மந்திகை ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர்.

நேற்றுக் காலை மூன்று சடலங்களும் கிராம சேவையாளர் திரு. ஏ. ஞானச்சந்திரன் முன்னிலையில் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

மரணமானோர் விவரம் வரு

(6-ஆம் பக்கம் பார்க்க)

## பொலீஸ் முறைப்பாட்டு பிரதிகள் தேங்கிக் கிடக்கின்றன

### உரியவர்கள் பெற்றுச் செல்லலாம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ். ஆஸ்பத்திரிப் பொலீஸ் பிரிவில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாட்டுப் பிரதிகள் தேங்கிக் கிடக்கின்றன.

இவற்றை உரியவர்கள் வந்து பெற்றுச் செல்லுமாறு பொலீஸ் அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

1988 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து முறைப்பாடுகளைப் பதிந்தவர்கள் பிரதிகளைப் பெற்றுக்கொள்ளாதிருப்பதாகச் சுட்டிக் காட்டப்படுள்ளது. [ஒ-10]

## நிலக்கண்ணிக்கு 3 பொலீஸார் பலி; பின்னர் 17 ஜே. வி.பியினர் கொலை

கொழும்பு, மார்ச் 21

அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள எப்பாவல என்ற இடத்தில் நேற்று முன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) இரவு இடம்பெற்ற கண்ணி வெடிச் சம்பவமொன்றில் மூன்று பொலீஸார் கொல்லப்பட்டனர். மூவர் காயமடைந்தனர்.

பொலீஸார் இந்தப் பகுதியில் வாகனம் ஒன்றில் ரோந்து சென்ற சமயம் அது கண்ணி வெடியில் சிக்கியதாக அறிவிக்கப்பட்டது.

நிலக் கண்ணி வெடிச் சம்பவத்தின் பிறகு அன்றைய தினமிரவு எப்பாவல பகுதியை அடுத்துள்ள கிரப்பன என்ற கிராமத்தில் பதினேழு பேர் கொலையுண்டனர். அவர்கள் அனைவரும் ஜே. வி. பி. இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும்- "அவர்களைக் கொன்றது யார் என்பது எமக்குத் தெரியாது" என்று அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மாத்தறையில், மாத்தறை நகராளுமன்றத்தின் தலைவர் திரு. ஜினதாஸ் ஹேவகே என்பவர் நேற்று இனந் தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார் எனவும் கூறப்படுகிறது. (ஒ-ஐ-எ)

## இராமநாதபுரம் காட்டில் ஷெல்!

வட்டக்கச்சி, மார்ச் 21

இராமநாதபுரம், கல்மடுப் பகுதிக் காடுகளை நோக்கி நேற்றுக் காலை 7 மணிமுதல் நண்பகல் 11 மணிவரை ஷெல்தாக்குதல் நடைபெற்றது.

இராமநாதபுரம் பகுதியில் இருந்தே ஷெல்கள் ஏவி விடப்பட்டதாகத் தெரியவருகிறது.

இக்காடுகளை அண்டியபகுதிகளில் தேடுதலும் இடம்பெற்றது. இதனையடுத்து இப்பகுதி விவசாயிகள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். (ஒ-163)

## சுபநேரம்

21- 03 - 1989
பங்குனி 08
செவ்வாய்க்கிழமை

சுபநேரம்:
10 - 48 முதல் 12 - 18 வரை
ராகுகாலம்:
03 - 18 முதல் 04 - 48 வரை
பூரணை விரதம்

## விளையாட்டுப் போட்டியின் இடையே புகுந்து சூடு!

### நால்வர் அங்கேயே உடன் பலி!!

கொழும்பு, மார்ச் 21

கடுவெலவில் விளையாட்டுப் போட்டி ஒன்று நடைபெற்றுக்கொண்டிருக்கையில் அவ்விடத்துக்கு முகமூடி அணிந்த கோஷ்டி ஒன்று வந்து துப்பாக்கிப்பிரயோகம் செய்தது.

இதில் ஐ. தே. க. பிரமுகர் ஒருவர் உட்பட நால்வர் அவ்விடத்திலேயே துடிதுடித்து மரணமானார்கள்.

மேற்கு மாகாண சபையின் உறுப்பினராக இருந்த திரு. ரஞ்சித் விக்ரமரத்ன என்பவரே அந்த ஐ. தே. க. பிரமுகர் ஆவார்.

விளையாட்டுப் போட்டிகள் முடிந்து பரிசளிப்பதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. அப்போது அங்கேதிடீரெனவந்தமுகமூடி அணிந்தவர்கள் சுட்டார்கள். அந்த இடத்திலேயே நால்வர் துடிதுடித்து மரணமானார்கள்.

இதேவேளை பொலன்னறுவையில் தீவிரவாதிகள் சுட்டதில் மூன்று பொலீஸார் இறந்ததாக அறிவிக்கப்படுகிறது.

### லொறி விபத்தில் மரணம்

முரசுமோட்டை 2ஆம் கட்டையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற லொறி விபத்தொன்றில் ஒருவர் மரணமானார்.

மரணமானவர் மு. பேரம்பலம் (வயது 42) என்பவராவார். (ஒ-163)

## அதிகாரங்கள் ஒரு மாதத்தில் கிடைக்குமாம்!

கொழும்பு, மார்ச் 21

மாகாண சபைகளுக்குவழங்க வேண்டிய சகல அதிகாரங்களும் இன்னும்ஒருமாதகாலத்தில் கையளிக்கப்பட்டு விடும்.

நாடாளுமன்றத்தில் மாகாண சபைகள் துணை அமைச்சர் ரூபா கருணாதிலக பேசுகையில் முன்கண்ட தகவலை வெளியிட்டார். (ஒ-எ)

## உணவுமுத்திரை பெறுவோர் விவரம் திரட்டப்படுகிறது

யாழ்ப்பாணம், மார்ச் 21

உணவு முத்திரை வைத்திருப்போர் பற்றிய விவரங்கள் கிராம சேவகர் பிரிவு ரீதியாக திரட்டப்பட்டு வருகின்றன.

"ஜனசக்தி" வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் நிவாரணம் பெறத் தகுதி உடையவர்களை இனம் காணுவதற்காகவே இந்த விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

யாழ். செயலக வட்டாரங்கள் இந்தத் தகவலைத் தெரிவித்தன.

கிராம சேவகர் பிரிவு ரீதியாக தயாரிக்கப்படும் உணவு முத்திரை வைத்திருப்போரின் பட்டியல்களின் பிரதிகள் யாழ். செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. [ஒ-5]

## இரு தினங்களில் 50 பேர் கொலை!

கொழும்பு, மார்ச் 21

தென்பகுதியில் நேற்றும் நேற்று முன்தினமும் வன்செயல்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 50 என்று அறிவிக்கப்பட்டது.

குருநாகல் மாவட்டத்தில் 16 பேரும், மத்திய மாகாணத்தில் 10 பேரும், கொழும்பு மாவட்டத்தில் 4 பேரும் தீவிரவாதிகளின் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

குருநாகலில் இறந்தவர்களில் இருவர் பொலீஸார், இருவர் ஆசிரியர்கள்.

மாத்தறை மாவட்டத்தில் நகரசபைத் தலைவர் நேற்றுக் காலை தீவிரவாதிகளால் கொல்லப்பட்டார்.

கண்டி மாவட்டத்தில் ஓய்வு பெற்ற பொலீஸ் அதிகாரி உட்பட 6 பேர் கொல்லப்பட்டனர். 3 தீவிரவாதிகளும் பாதுகாப்புப் படையினரால் நேற்று முன்தினம் சுட்டுக் கொல்லப்பட்டனர். (ஒ-எ)

## முச்சந்தி முரளி



மூண்டு மாதங்களுக்குள்ளே தீவிரவாதத்தை ஒழிப்பதாக ரஞ்சன் விட்ட சவாலுக்குப் பதிலடி தானோ இரண்டு நாள் உயிர்ப்பலியளும்.....

## வவுனியாவை அதிரவைத்த பெரும் குண்டுச் சத்தங்கள்!

வவுனியா, மார்ச் 21

நேற்று [திங்கட்கிழமை] அதிகாலை சுமார் மூன்று மணியிலிருந்து தூரத்தில் குண்டு வெடிக்கும் சத்தங்கள் வவுனியாவரை கேட்டன. தொடர்ச்சியான இச்சத்தங்களினால் வவுனியாப் பகுதியில் அதிர்வுகளை உணரமுடிந்ததாக பலரும் தெரிவித்தனர்.

சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் எங்கோ தூரத்திலிருந்து கேட்ட இக்குண்டு வெடிச் சத்தங்களை அடுத்து அதிகாலையில் வவுனியாவிலிருந்து ஹெலிக்கொப்டர்கள் புறப்பட்டுச் சென்றதை அவதானிக்க முடிந்தது. [ஒ-164]

## பொலீஸ் நிலையத் தாக்குதல்; அசமந்த போக்கே காரணம்!

கொழும்பு, மார்ச் 21

கடந்த சில தினங்களாக பொலீஸ் நிலையங்கள் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு பொலீஸாரின் அசமந்தப் போக்கே காரணம் என்று ஜனாதிபதியின் பாதுகாப்பு ஆலோசகர் குற்றஞ் சாட்டியிருக்கிறார்.

தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தும் சாத்தியக் கூறுகள் தென்படுவதாக சிரேஷ்ட பொலீஸ் அதிபர்களுக்கு முன்கூட்டியே எச்சரிக்கை விடுத்தும் சம்பந்தப்பட்டவர்கள் அக்கறை எடுக்கவில்லை.

அண்மையில் இடம் பெற்ற பொலீஸ் நிலையத் தாக்குதல்கள் குறித்து அறிக்கை கேட்டுள்ளேன். அவை கிடைத்தவுடன் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பாதுகாப்பு ஆலோசகர் ஜெனரல் சிறில் ரணதுங்க சொன்னார்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனை

நல்ல நிலையிலுள்ள C 50 Chaly (புதிய மொடல்) விற்பனைக்கு உண்டு. ஞாயிற்றுக் கிழமைகளில் பார்வையிடலாம். தொடர்புகொள்ளவும்; P. பரமேஸ்வரன், துர்க்கை அம்மன் கோவில் வீதி, நுணுவில் மேற்கு, சாவகச்சேரி. [10124]

Love Birds பறவைகள்கூட்டுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: P. பரமேஸ் வ ர ன், துர்க்கையம்மன் கோவில்வீதி, நுணுவில் மேற்கு, சாவகச் சேரி. [10123]

யாழ் கச்சேரியிலிருந்து 100 யார் சுற்றுடலுக்குள் சகல நவீன வசதிகளுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மாடிவீடு உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க: 465, C/o உதயன், யாழ்ப்பாணம். [10094]

கண்ணைக்கவரும் எவர்சில்வர் பாத்திரங்களுக்கு நாடுங்கள். ''Rajz Brand'' தரமானவை. நீடித்து உழைப்பவை. இருநூற்றுக்கும் மேற்பட்ட பலவகை டிசைன்களில் பல்வேறு நிலையினரின்தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒரே உற்பத்தியாளரால் உற்பத்தி செய்யப்படுகின்றன. Rajz Brand எவர்சில்வர் தயாரிப்புகள் யப்பானிலிருந்துஇறக்குமதி செய்யப்பட்ட தரமான AISI 3043, தகடுகளால் செய்யப்படுகின்றன. காட்சி அறை, S. A. Thevathasan, சூராவத்தை, சுன்னுகம். (C/1890)

Toshiba T. V. Show-case, அலுமாரி, கட்டில், கபேட், கசற் றேடியோ, கண்ணுடி மேசை, Fan, Type-writer, மேசைகள் மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு. நடராஜா குருக்கள் வாசம், வீரமாகாளி அம்மன் கோயில் வளவு, நல்லூர். (10106)

### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கொட்டடி லேடன் பெனியன் தொழிற்சாலைக்கு அருகாமையில் சகல வசதிகளையும் கொண்ட 2பரப்புக் காணியுடன் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க: 16 ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். [10092]

### காணி விற்பனைக்கு உண்டு

டவுணிலிருந்து அரைமைல் தூரத்தில் மாநகரசபை எல்லைக்குள் ஓட்டுமடச் சந்திக்கும் பிரப்பங்குளச் சந்திக்குமிடையில் 1 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு; 192, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். [10080]

### NEW CITY TRADER

சகல விதமான சுவர் மணிக்கூடுகள், கைக்கடிகாரங்கள், மேசை மணிக்கூடுகள், Film roll வகைகள், சூட்கேஸ் Travelling bags, School bags, Wheel bags, எவர்சில்வர் பொருள்கள், Glass மற்றும் அன்பளிப்புப் பொருள்களைப் பெற்றுக் கொள்ள New City Traders, 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (C/1840)

### வெளிவந்துவிட்டது

புலவர் இ. சுப்பிரமணியம் அவர்களால் விஞ்ஞான ரீதியில் சைவசமயச் சிறப்புக்களை எடுத்தியம்பும் விஞ்ஞானமும் மெய்ஞானமும் என்ற அற்புதமான நூல் வெளிவந்துள்ளது. பிரபல புத்தகசாலைகளில் பிரதிகளுக்கு முந்துங்கள். [விலை சகாயம்] தொடர்பு: 61, மருதடி வீதி, வே. சுந்தரலிங்கம், யாழ்ப்பாணம். [10122]

### கோழிக்குஞ்சு விநியோகம்

Golden Comet பிறவுண் பேட்டுக்குஞ்சுகள், சேவற்குஞ்சுகள் கறுப்பு சேவற் குஞ்சுகள் 22 ஆம் திகதி புதன் கிழமையும், Bairaha Farm புறொயிலர் குஞ்சுகள், பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், பிறவுண் சேவற் குஞ்சுகள், Hyline வெள்ளை, கறுப்பு பேட்டுக் குஞ்சுகள் 23ஆம் திகதி வியாழக்கிழமையும் விநியோகிக்கப்படும். முற்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். [10093]

### கோழிக்குஞ்சு விநியோகம் Uplands Farm

[Lohmann)& [Dekalb] பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், பிறவுண் சேவல் குஞ்சுகள் [பிலிமத்] கறுப்பு சேவல் குஞ்சுகள் [29-3 -89] புதன்கிழமை விநியோகிக்கப்படும். சொண்டு வெட்டப்பட்டது. தடுப்பூசி போடப்பட்டது. முற்கூட்டியே பதிவு செய்க. இல 9, கந்தையா லேன், சுன்னுகம். [புகையிரத நிலையத்துக்கு அருகாமையில்](10125)

### WANTED

Female Accounts Trainees with a minimum Qualification of two parts in I.C M A or Equalent for our Colombo office free transport with meals subsidised Apply or Call Personely after 22 nd Agro Marine Ltd, 35, Bank shall Street Jaffna. (10090)

### தவறிவிட்டது

சனிக்கிழமை 18- 3-89மாலை மட்டக்களப்பைநோக்கி புறப்பட்ட மினிபஸ்ஸில் 5 Bag யாழ்ப்பாணத்திற்கும் வவுனியாவிற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் R. B Booking Centre, யாழ்ப்பாணத்தில் தயவு செய்து ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (10095)

இ. மதியழகன், பலாலி ஆசிரியர் கலாசாலை, கோப்பாய் என்று பெயரிடப்பட்ட பல குறிப்புப் புத்தகங்கள் 20- 03- 89 காலை கல்வியங்காட்டிற்கும் இருபாலைக்கும் இடையில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (10096)

### சேவை

வாடிக்கையாளர்களின் வசதியைக்கருதி எமதுஸ்தாபனம் தினமும் இரவு 9 மணிவரை திறந்து இருக்கும் Old Park Chinese Restaurant Chundukuli, Jaffna. (10075)

### திருவாசகம் முற்றோதல்

இடம்: ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் ஆலயம் குடைச் சாமியார் சமாதி, கோண்டாவில் கிழக்கு. தேதி 22-3-89 புதன்கிழமை பங்குனி உத்தரத்தன்று காலை 6. 45 தொடக்கம். அடியார்கள் அனைவரும் பங்குகொள்ளவும். அ. ந. விநாயகர் சபையார். (10355)

### பாலர் கல்வி

அன்பு பாலர் பாடசாலை (கிளை) பாலராசிரியர் சங்க மேற்பார்வையில் 3 வயதுக்கும் 5 வயதுக்கும் இடைப்பட்ட பாலர்களுக்கு 'மொன்றிசோறி' முறையினை தமிழ்ப் பண்பாட்டுக்குரிய வகையில் பாலராசிரியர் பயிற்சி பெற்ற ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது. உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (10118]

### கல்வி

அன்பு கல்வி நிறுவனத்தின் ஆதரவில் 1-ஆம்-ஆண்டுதொடக்கம் 10ஆம் ஆண்டுவரை எல்லாப் பாடங்களும் மாலையில் நடைபெறுகின்றன. பாடத்திற்கேற்ற தனித்துவமான ஆசிரியர் குழு. குறைந்த கட்டணம். நிறைந்த கல்வி. உயர்கலைக் கல்லூரி. ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (10117)

### A / L 91 இரசாயனம்

108, Brown Road, Jaffna A/L 91 இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ் ஆரம்பம்: 23-3-1989 வியாழன் 6.30 a.m செவ், வியா 6.30 a.m அடுத்தபிரிவு ஆரம்பம்: 25-3-1989 சனி 11.00 a.m சனி. ஞாயிறு 11.00 a.m (10089)

### TYPEWRITERS

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும் தமிழ் ஆங்கில டைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises, 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (C/1876)

### SPOKEN ENGLISH

தூர இடங்களிலிருந்து வருபவர் வசதியையிட்டு புதிய பிரிவு ஆரம்பம் 23- 3- 89 செவ்வாய்/ வியாழன் நாட்களில். நேரம் 10.30 - 12.00 மணிவரை. S. B. Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். [9869]

## யாழ் இந்துவில் வைபவம்

யாழ்ப்பாணம், மார்ச். 21

''கெல்ற்'' ஆங்கில பயிற்சி முடிவும் அதையொட்டி நடைபெறும் பிரியாவிடை வைபவமும்இன்று செவ்வாய்க் கிழமை யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறும்.

''கெல்ற்'' பயிற்சி மாணவர்களால் தயாரிக்கப்பட்ட ''த போக்கஸ்'' என்ற ஆங்கில சஞ்சிகையும் இன்று வெளியிடப்படும்.

யாழ். பல்கலைக்கழக புவியியல் பீடத்தலைவர் பேராசிரியர் பொன். பாலசுந்தரமும் பாரியாரும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்கிறார்கள். (ச)

## ஓவியக் கண்காட்சி

யாழ்ப்பாணம் மார்ச் 21

யாழ். பிரெஞ்சு நட்புறவுச் சங்கத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் செல்வி வாசுகி ஜெகநாதனின் ஓவிய கண்காட்சி இன்று செவ்வாய்க்கிழமை முதல் 26ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவிலுள்ள யாழ் - பிரெஞ்சு, நட்புறவுச் சங்கத்தில் நடைபெறும். இன்றைய அரங்கேற்றம் பி.ப. 3,30 மணிக்கு ஆரம்பமாகும்.

மரணச் சுவடு, சகமனிதர், விழிப்பு, போராளிகள் முடிவிடம் ஆகிய தலைப்புகளிலுள்ள ஓவியங்களை வரைந்து இவர் பாராட்டுக்களைப் பெற்றுள்ளார். (ச)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஆசிரியர் மு. சி. கனகரத்தினம்

மண்ணுலகம்: 21 - 03 - 1904

விண்ணுலகம்: 25 - 03 - 1986

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

13/3, நாயன்மார் வீதி,
நல்லூர். [10104]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்: 12- 11- 1906

மறைவு: 20- 02- 1989



### திரு. சிவசிதம்பரப்பிள்ளை பாலசுப்பிரமணியம்

(இளைப்பாறிய பிரதிப் பிரதம கணக்காளர்)

அன்னாரது இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச்செய்தி அனுப்பியவர்களுக்கும், பலவழிகளிலும் உதவி நல்கிய உற்றார் உறவினர், நண்பர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் 22- 03- 1989ஆம் திகதி புதன்கிழமை அன்று எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

தபாற்கந்தோர் வீடு,
[illegible] (10364)

# மரண அறிவித்தல்கள்

## பிரம்மஸ்ரீ பொ. நடராஜக் குருக்கள்

பிரம்மஸ்ரீ பொ. நடராஜக் குருக்கள் 19 -03 -89 மாலை 3.00 மணியளவில் காலமானார்.

அன்னார் மகியப்பிட்டியைச் சேர்ந்த காலம் சென்ற பொன்னுத்துரை குருக்கள் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், காலம் சென்ற கௌசல்யாவின் அன்புக் கணவரும், காஞ்சனா, சாந்தினி, வாசுகி, இராஜமனோகரி, வளர்மதி, சிவஸ்ரீ, நந்தஸ்ரீ, சுபாசினி ஆகியோரின் தகப்பனாரும்,சரவணபவானந்தக் குருக்கள் (மாத்தளை), ருத்திர ராஜன் (கொழும்பு) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக 20 - 03 - 89 அன்று கொக்குவில் மஞ்சவனப்பதி சண்முகராஜக்குருக்கள் (குட்டி) இல்லத்திலிருந்து கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். [10363]

## நீக்கிலாப்பிள்ளை ஜேம்ஸ், B.A

(முன்னாள் அதிபர்- புனித சூசையப்பர் கல்லூரி, மாதகல்)

நீக்கிலாப்பிள்ளை ஜேம்ஸ் காலமாகிவிட்டார்.

அன்னாரின் பூதவுடல் 21- 3- 89 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2- 30 மணிக்கு அன்னாரது இல்லத்திலிருந்து புனித கதிரைமாதா ஆலயத்திற்குத் திருப்பலிக்காக எடுத்துச் செல்லப்பட்டுச் சில்லாலைச் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
Dr. Alphonsus Athanasiyar.

ஜெயாமன்றம், சில்லாலை. (10362)

## திருமதி நாகரெத்தினம் இராசரெத்தினம்

(இளைப்பாறிய ஆசிரியை, நயினாதீவு)

16-3-89 இல் காலமாகிய திருமதி நாகரெத்தினம் இராசரெத்தினம்அவர்களின் இறுதிக்கிரியைகள் 21-3-89 இன்று செவ்வாய்க்கிழமை பி. ப 1.00 மணிக்கு நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
கு. சச்சிதானந்தன்
(மருமகன்)
இலங்கை வங்கி,
ஸ்ரான்லி றோட்.

''ஆயர்பாடி''
32, நெல்லியடி லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (10139)

## திரு விஜசித்தம்பி பொன்னையா

நுணுவில் கிழக்கு சாவகச்சேரியைச் சேர்ந்த திரு. விஜசித்தம்பி பொன்னையா [ஓய்வுபெற்ற ஓவசியர்] 19-3-89 ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று 20-3-89 திங்கட்கிழமை சாவகச்சேரியில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

இந்திரமதி
நுணுவில் கிழக்கு,
சாவகச்சேரி. (C/1988)

## செபஸ்ரியாம்பிள்ளை தோமஸ்

மாதகலைச் சேர்ந்த தோமஸ் 20ஆம் திகதி திங்கட்கிழமை காலமானார். இவர் செபஸ்ரியாம்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், திரேசம்மாவின் அன்புக் கணவரும், பற்றீசியா, அமலநாதன் [தபால் அலுவலகம், சயினபே) இமல்டா (அரசாங்க செயலகம் யாழ்ப்பாணம்), செபஸ்ரியாம்பிள்ளை (பிறிமா சிலோன் லிமிட்டெட் திருகோணமலை), சாந்தா, செல்வகுமார் ஆகியோரின் அன்புத் தகப்பனும், அகஸ்ரின், அல்பிறெட், டல்சி ஆகியோரின் அன்பு மாமனும், செல்லப்பாக்கியம், மரியநாயகம், இம்மானுவேல், அருளப்பு, ராஜநாயகம், ஜேம்ஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும், றஜீவ், சோபியா, சுபோதினி, ஜெறோம் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். இவரின் நல்லடக்கம் 22ஆம் திகதி புதன்கிழமை மாலை 3 மணிக்கு மாதகல் புனித தோமையார் சேமக்காலையில் நடைபெறும். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மெயின் வீதி,
மாதகல்.

தகவல்;
மகன் T. அமலநாதன்
(10129)

## பெரியதம்பி முருகதாஸ்

நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைச்சேர்ந்த பெரிய தம்பி முருகதாஸ் காலமானார். இவர் காலம் சென்ற பெரிய தம்பி சிவகாமி ஆகியோரின் மூத்த மகனும், மெல்லியம்மா சொர்ணகாந்தி, பரிமளகாந்தி, கமலவேணி மோகனதாஸ் [கனடா] ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலம் சென்ற செல்லத்துரை, முத்துலிங்கம் நடராசா, சிவகுமார் ஆகியோரின் மைத்துனரும் லவகுசன் [லவன்] [அமெரிக்கா] புஸ்பராணி சோமகலா [கனடா] சிவஞானம், ஜீவதாம்பாள் விமலேஸ்வரன் [இந்தியா] நளாயினி, சத்தியபாமா ரேணு [பாங்கொக்] ராகவன், உமா, ஸ்ரீசக்தி, ஸ்ரீராகவன், திருமாலினி, சிவசங்கர், சிவஅருள் ஆகியோரின் அன்பு மாமனும் சிவபாதலிங்கம் திருமதி லவகுசன் சோனு [அமெரிக்கா] ஆகியோரின் சிறிய தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியை 21-3-89 இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3 மணியளவில் 37/9 மாட்டீன் றோட், யாழ்ப்பாணம் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
சகோதரர்கள்

37/9 மாட்டீன் றோட்,
யாழ்ப்பாணம். [10137]


# கம்பியூட்டர் கல்வி

**Diploma in Computer Programming & Data Processing**

**BASIC**

**4 Months**

சனி, ஞாயிறு வகுப்புகள்

Practicals on Computers
Including I B M (Compatibles)

**Lectures by Members of the Institute of Data Processing Management (London)**

ஆரம்பம் 01 - 04 - 1989

**Fees:** மாதம் 300/- மட்டுமே!

பெறுமதி வாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும்

CIMA, IDPM, IAB,
Book - Keeping, Hotel Management
வகுப்புகளும் நடைபெறுகின்றன.

மேலும் விபரங்களுக்கு:

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**

(Leaders in Computer Education)
16, 3rd Cross Street,
(O L R தேவாலய மேற்குப்பக்கம்)
**Jaffna.**

(C/1978)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொண்டர் படையினர் 78பேருக்கு பயிற்சிமுடிந்தது

வவுனியா, மார்ச் 21

வன்னிப் பகுதியில் சட்டம், ஒழுங்கு, அமைதியை நிலை நாட்டும் நடவடிக்கைகளில் 600 மக்கள் தொண்டர்படையினர் ஈடுபடுத்தப்படவுள்ளார்கள். இதன் முதற் கட்டமாக 78பேர் பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறியுள்ளார்கள்.

இவ்வாறு வவுனியா அமைதிப் படையின் பிரிகேடியர் தினேஷ் சௌஹான் தெரிவித்தார்.

சனிக்கிழமை யாழ்.வீதியில் அமைந்துள்ள இந்திய அமைதிப் படை முகாமில் பயிற்சி பெற்ற முதல் தொகுதி மக்கள் தொண்டர் படையினர் பிரிகேடியரின் முன்னால் சத்தியப் பிரமாணஞ் செய்து வெளியேறிய வைபவத்தில் பத்திரிகையாளர்களிடம் உரையாடினார். அப்போது அவர்மேலும் தெரிவித்ததாவது:-

முறையான ஒரு பயிற்சியின் பின் மூன்று படைப் பிரிவினராக இந்த 78 பேரும் வவுனியா, புளியங்குளம், நெடுங்கேணி ஆகிய இடங்களில் உடனடியாகக் கடமையிலீடுபடுத்தப்படுவார்கள்.

ஏற்கனவே கடமையில் ஈடுபடுத்தப்பட்ட தொண்டர் படையினரில் 5 பேர் உயிர் இழந்துள்ளார்கள். இப்படி அவர் தெரிவித்தார். [ஓ-164]

## சிப்பந்திகளுக்கு விடுமுறை

மட்டக்களப்பு, மார்ச். 21

மட்டக்களப்பு, நகரிலுள்ள கடைகள் யாவும் ஞாயிற்றுக் கிழமைகளில் மூடப்பட்டு சிப்பந்திகளுக்கு விடுமுறை வழங்கப்படுகின்றது.

சிப்பந்திகளின் கோரிக்கையின் பிரகாரம் வர்த்தகர்கள் இம்முடிவை எடுத்துள்ளனர். [ச 21]

## தாம் விரும்பிய இடத்தில் பொலீஸார் பணிபுரியலாம்

கொழும்பு, மார்ச் 21

நாடு முழுவதிலும் உள்ள பொலீஸ் நிலையங்களில் பணியாற்றும் 28ஆயிரத்து 600 பொலீஸாரும் தாம் விரும்பிய இடத்தில் பணிபுரிய அனுமதிக்கப்படுவர்.

தாம் எங்கு பணியாற்ற விரும்புகின்றனர் என்பதை இவ்வாரத்தினுள் சகலரும் அறிவிக்கவேண்டும் என்று பொலீஸ் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஓ-எ)

## ஆண்கள் எத்தனை? பெண்கள் எத்தனை?

வெளிநாடுகளில் பணி புரியும் இலங்கையரில், ஆண்கள் எத்தனை, பெண்கள் எத்தனை?

வெளிநாட்டு வேலைவாய்ப்பும் பணியகம் இது சம்பந்தமான விவரங்களை வெளியிட்டிருக்கிறது.

வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கையரின் எண்ணிக்கை 2 லட்சத்து 50 ஆயிரம்.

இவர்களில் 1 லட்சத்து 50 ஆயிரம் பேர் பெண்கள். இதிலும் 80 சதவீதத்திற்கு மேற்பட்டோர் வீட்டுப்பணிப் பெண்கள்ஆவர். (இ-எ)

## கோழிக் குஞ்சு விநியோகம்

கால்நடை வளர்ப்போர் சங்க சுன்னாகம் கிளையினரால் இம் மாதம் 27ஆம் 30ஆம் 31ஆம் திகதிகளில் ஒரு நாள் கோழிக்குஞ்சுகள் விநியோகிக்கப்படவுள்ளன. (க-90)


வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

★ கீழைத்தேயக் கல்வியியற் சிந்தனைகள்

அமரர் என். கே. தர்மலிங்கம். எம். ஏ. (கல்வி) அவர்களால் எழுதப்பட்டது.

அணிந்துரை : பேராசிரியர் ப சந்திரசேகரம் (யாழ். பல்கலைக்கழகம்)

சிறப்புரை : சிரேஷ்ட விரிவுரையாளர் வ. ஆறுமுகம் (யாழ். பல்கலைக்கழகம்)

இவர்களின் மதிப்பைப் பெற்று வெளிவந்துள்ளது.

பிரபல புத்தக வியாபாரிகள் பூபாலசிங்கம், மாக்மிலன், வட இலங்கை புத்தகசாலை, சோதிடவிலாஸ் புத்தகசாலை, ராஜன் புத்தகசாலை. இவ் விடங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

நேரில் பெற விரும்புவோர் இல: 93, கச்சேரி கிழக்கு ஒழுங்கையிலும் பெற்றுக்கொள்ளமுடியும்.

(9885)


பூநகர் குடியேற்றம்:

## 1,500 ஏக்கர் நிலத்தில் நெற் செய்கை இல்லை

### பிரதான நீர்ப்பாசன வாய்க்கால் 3 வருடமாக திருத்தப்படாத நிலை

மூதூர், மார்ச். 21

ஈச்சிலம்பத்தை பிரதேசத்தில் பூநகர் குடியேற்றக் கிராமத்தில் 1500 ஏக்கர் நிலத்தில் நெற் செய்கை பண்ண முடியாத நிலை இருந்து வருகிறது.

அல்லைத்திட்டத்தின் கீழ் மகாவலிகங்கை நீர் இக்கிராம வயல் நிலங்களுக்குச் செல்லும் பிரதான நீர்ப்பாசன வாய்க்கால் கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாது இருப்பதாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

வாய்க்கால் திருத்தப்பட்டு நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்காததால் நெற் செய்கையில் ஈடுபடாதிருக்கும் இப் பூநகர் குடியேற்றக் கிராம வாசிகள் பொருளாதாரத் துறையில் மிகவும் பாதிப்படைந்துள்ளனர்.

1985 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் மூதூர் பிரதேசத்தில் இடம்பெற்ற வன்செயலின் போது இக்கிராம வாசிகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-98)

## கோபாலசாமி எம். பி. மன்னிப்புக் கேட்கவேண்டும்

### மீண்டும் கிளறுகிறார் ரஞ்சன்!

சட்டவிரோதமாக இலங்கை வந்து திரும்பியதற்காக திராவிடமுன்னேற்றக்கழக எம்.பி. திரு. வை. கோபாலசாமி மன்னிப்புக் கோரவேண்டும்.

வெளியுறவு அமைச்சர் திரு. ரஞ்சன்விஜேரத்தின கோபாலசாமி விவகாரத்தை மீண்டும் இப்படிக் கிளறியிருக்கிறார்.

திரு. கோபாலசாமியை இந்திய அரசு விசாரணைக்காக இலங்கைக்கு நாடுகடத்த வேண்டும் என்று அமைச்சர் முன்னர் கேட்டிருந்தார்.

ஆனால் இப்பொழுது மன்னிப்புக் கேட்கவேண்டும் என்று நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் கூறியதாவது:

புதுடில்லியில் உள்ள இந்தியத் தூதர் திரு. டிக்ஸிற் கொழும்பு திரும்பியதும் கோபாலசாமி மன்னிப்புக் கோரவேண்டும் என்ற கோரிக்கையை அவரிடம் வலியுறுத்தவிருக்கிறோம்.

கோபாலசாமி எந்தத் துறைமுகத்தின் வழியாகவும் வந்ததற்கான ஆதாரமுமில்லை. மீன்பிடிப்படகு மூலமே அவர் வந்திருக்கமுடியும்,

எப்படியிருப்பினும் விவகாரத்தை இந்திய அரசின் கவனத்துக்குக் கொண்டுவந்திருக்கிறோம் — இப்படி பாதுகாப்பு துணை அமைச்சர் விஜேரத்ன கூறினர். (ஓ-எ)

உபவேந்தருக்குகொலைப்பயமுறுத்தல்

## தெற்குப்பல்கலைக்கழகங்கள் திறக்கப்படும் சாத்தியமில்லை

தென் பகுதியில் உள்ள பல்கலைக்கழகங்கள் இப்போதைக்கு திறக்கப்படும் சாத்தியம் இல்லை என்று தெரியவருகிறது

முன்னாள் பல்கலைக்கழக உபவேந்தர் ஸ்ரான்லி விஜேசுந்தராவைக் கொலைசெய்த சம்பவத்தின் பின்னர் இன்னொரு பல்கலைக்கழக உபவேந்தருக்கும் கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாம்,

இந்த உப வேந்தர் பல்கலைக் கழகத்தை மீண்டும் திறப்பதற்கான வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்


"ஆழ் கடலில் ஓர் அற்புதம்"

யாழ்- பிரெஞ்சிய நட்புறவுச் சங்க ஆதரவில் நடைபெறும்

செல்வி வாசுகி ஜெகநாதனின் "ஓவியக் கண்காட்சி"

வெற்றி பெற வாழ்த்துகின்றோம்

ஜோ. எகட்டன்

செனித் மார்கட்டிங் அன்ட் அட்வடைசிங்
19/3, கொழும்புத்துறை வீதி,
யாழ்நகர்

(எமது உற்பத்திப் பொருட்களைக் காட்சியின் போதும் பெற்றுக்கொள்ளலாம்)

(10043)

வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்களுக்கு

ஓர் செய்தி

16, கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள எமது 'நவா எம்போறியம்' எனும் ஸ்தாபனம் நாளை 22-3-89 தொடக்கம்

(F)பிராங் எம்போறியம்

எனும் புதிய பெயருடன் அதே இடத்தில் இயங்கும் என்பதை அறியத் தருகின்றோம்.

(C/1906) உரிமையாளர்.

தேர்த் திருவிழா



சுன்னாகம் தாளையடி

ஸ்ரீ அரிஹரபுத்திர ஐயனார்

கவின்மிகு தேரில் பவனி வரும் இந்த நன்னாளில்
அடியார்கள் அனைவரும் அருளும் அமைதியும்
சகல சிறப்புக்களும் பெற்று மண்ணில்
நல்ல வண்ணம் வாழ
நீள நினைந்து, கரம்கூப்பி, சிரம் தாழ்த்தி
எமது இதயக் கமலத்தை, பூரணை - புட்கலை சமேத
ஐயன் திருவடிகளில் அர்ப்பணிக்கின்றோம்

றேயல் விளையாட்டுக் கழகம், சுன்னாகம்
பாலன் ஸ்ரோர்ஸ், சுன்னாகம்
தயா மரக்காலை, சுன்னாகம்
துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ், சுன்னாகம்
ஹரிரெக்ஸ், சுன்னாகம்
நாகம்ஸ் சினிமா, சுன்னாகம்
பல நோ. கூ. சங்கம், சுன்னாகம்.

சுன்னாகம்.
21-03-1989

C/1556


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறந்தநாள் நினைவஞ்சலி



தோற்றம்:
21-03-1962

★

மறைவு:
15-09-1987

துர்க்கைநாதன் கணேசன்
அவர்களின்
செல்வம் புதல்வன் சிவகரன்

என் செல்வமே இன்று உன் பிறந்தநாள்.
நீ பிறந்த நாளே இறந்துவிட்டாய் இக்கண்ணீரும் வேதனையும் சொற்பம்.
உன்னை இருபத்தி ஐந்து வருஷமும் வளர்த்திருந்தேன்
திடீர் என்று தந்த கடவுளே பறித்தும் விட்டார்.
என் கண்ணீருக்கு கட்டுப்பாடு இல்லை.
இப்பூமியில் யான் இருப்பது வீண்
எந்த தாயும் என்போல் வேதனை அடையக் கூடாது.

திருமதி கணேசன் குடும்பம்.
(10356)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:-
07 - 10 - 1951

மறைவு:-
17 - 03 - 1984

### திருமதி நாகபூஷணிதேவி மாணிக்கராசா

அன்பின் உருவமாய் பண்பின் சின்னமாய் எங்கள் அனைவருக்கும் திகழ்ந்த தேவியே! மீளாத்துயிலால் எம் அனைவரையும் மாளாத் துயரில் வாடவைத்து விட்டு இறைவனடி சேர்ந்து ஐந்து ஆண்டுகளானாலும் உங்கள் நினைவு எங்கள் உள்ளங்களிலிருந்து என்றும் நீங்காது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
அன்புக் கணவர், பெற்றோர்
உறவினர்கள்.

40/1, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.
(10019

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### பெருமாள் நாயுடு சுப்பையா
அவர்கள்

ஈசன் அருளிய மலர்: 12 - 06 - 1948 ✱ ஈசனடி சேர்ந்த மலர்: 21 - 03 - 1987

அன்பின் திருவுருவாய் பண்பின் சிகரமாய் வாழ்ந்து எங்கள் அனைவரையும், ஆருத்துயரத்தில் ஆழ்த்தி இறைபதம் அடைந்தீர்கள், உங்கள் நினைவுச்சுடர் எங்கள் இதயங்களில் என்றும் அணையாத தீபமாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கும். தங்கள் ஆத்மா சாந்தியுடன் இறையடியில் இருக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள், அம்மா, மாமா, மாமி,
மைத்துனர்கள், சகோதரர்கள், சகலன், மச்சாள்,
நண்பர்கள்

No, 4, மாவடி ரோட்,
யாழ்ப்பாணம்
(உ 10353)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வி சேனதிராசா பிரேமதரா

அன்னையின் மடியில்:- 10- 02- 1966
அழிப்பு:- 21- 03- 1986

எமது அருமை பிரேமாவே!
எம்மை எல்லாம் ஏங்க வைத்து
ஏன் பிரிந்து சென்றீரோ?
உம் பிரிவால் ஏங்கி ஏங்கி
எம் உள்ளம் வாடுதம்மா

மரணங்கள் நிச்சயம் அறிவோம்
மறுபிறவி உண்டென்றும் அறிவோம்
அதனால் தானோ எம் வீட்டில்
உதித்தீர் என நாம் நம்புகிறோம்.

நீர் இறந்த நேரம்
நீர் பிறந்த நட்சத்திரம்
நீர் பிறந்த ராசியில்
எம் வீட்டில் உதித்த நிலா
நீர் எனவே நம்புகின்றோம்.

ஆதலினால் அன்றே பிரேமநாத்தென
ஆசைப் பெயரிட்டோம்
என்றாலும் உம் நினைவு
எம்மை விட்டு நீங்கிடுமோ?
பிரேமநாத்தைக் காணும் போது
பிரேமாவைக் காணுவதால்
மனம் சிறிது ஆறுதம்மா
மரணம் வரை உமை மறவோம்.

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உம் நினைவில் வாடும்:
அப்பா, அம்மா, அத்தான், அக்கா,
பெருமகன், அண்ணமார், அம்மம்மா,
உறவினர்கள்.

50/25, வைரவர் கோவில் லேன்,
கொட்டடி.
[9666)


CEYGMA PUMPS
சிக்மா பம்ப்ஸ்
மண்ணெண்ணெயில் இயங்கும்

● விலியர்ஸ் (Villiers) MK 12
● குபோடா (Kubota) KS 160

என்ஜின் பொருத்தப்பட்ட சிக்மா பம்ப்ஸ்
இப்பொழுது கையிருப்பில் உண்டு.

குறிப்பிட்ட தொகையே வந்திருப்பதனால் உங்கள் தேவைகளை உடனே பூர்த்தி செய்து கொள்ளுங்கள்.

விலியர்ஸ் MK 12 என்ஜின் பொருத்தியது- Rs. 7950.00
குபோடா KS 160 என்ஜின் பொருத்தியது- Rs. 9300.00

மற்றும் உங்கள் வீட்டுத் தேவைக்கும், தோட்ட இறைப்பிற்கும் ஏற்ற மின் மோட்டார்களும் எம்மிடம் கையிருப்பில் உண்டு.

யுனைற்றெட் அக்ரோ என்ஜினியரிங்
274/1, ஆஸ்பத்திரி வீதி,
(பெரியாஸ்பத்திரி முன்பாக)
யாழ்ப்பாணம்.

தொழிற்சாலை:
நாவற்குழி,
கைதடி.
(C/1972)


## மட்டக்களப்பில் பிராந்தியக் கிளை

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் பிராந்தியக் கிளை இம்மாதம் 25ஆம்திகதி மட்டக்களப்பில் திறந்து வைக்கப்பட இருக்கின்றது.

கண்டி, கொழும்பு போன்ற தூர இடங்களுக்குச் சென்று தமது பாடங்களைக் கற்று வந்த கிழக்கு மாகாண மாணவர்கள் இனி மட்டக்களப்பிலேயே தமது பாடங்களைக் கற்கக்கூடிய வாய்ப்புக் கிடைக்கின்றது.

கிழக்குப் பல்கலைக் கழகத்தின் மட்டக்களப்பு நகரிலுள்ள கட்டடமொன்றில் இந்தக் கிளை திறந்து வைக்கப்படும்.

## கட்டுரைப் போட்டி முடிவு

குப்பிளான் விக்கினேஸ்வரா இளைஞர் கலை, இலக்கிய மன்றத்தால் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் முதல் மூன்று பரிசுகளைப் பெற்றோர் விவரம் வருமாறு:

17 - 25 வயதுப் பிரிவு: 1ஆம் இடம்: சி. சிவகுமார், 2ஆம் இடம்: இ. உஷாஜினி, 3ஆம் இடம்: தி. சசிகலா.

16 வயதுக்குட்பட்டவர்கள்: 1ஆம் இடம்: க. சிவாஜினி, 2ஆம் இடம்: ப. மங்கையர்க்கரசி, 3ஆம் இடம்: சி. சிவராம்,

சிறப்புப் பரிசுக்காக ஆறு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். [ச]


BITSMANS
INSTITUTES
MANIPAY
91 A/L கலை
வர்த்தக விஞ்ஞான
வகுப்புகள்
ஆரம்பமாகி விட்டன
(10366)

MODERN
Education Centre
Karaveddy
A/L 91
கலை, வர்த்தக
பாடங்கள் மட்டும்
18-03-1989-ல்
ஆரம்பமாகிவிட்டது.
(9892)

SPOKEN ENGLISH
With Grammar Batch - II
ஆங்கிலம் இலகுவாக பேசுவதற்கு ஆரம்பத்திலிருந்து
ஆரம்பம்: 22-03-89
பதிவுகட்கு :-
North Ceylon Technical Institute
(C/1968)


## வடக்குக் கிழக்கு மாகாண அரசின் காணி விவசாய அமைச்சு

அமைச்சினால் மேற்கொள்ளப்படவிருக்கும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிபுணர்களின் சேவைகள் தேவைப்படுகின்றது. மேற்படி நிபுணர்களின் சேவையை இலகுவாக ஏற்படுத்திக் கொள்வதற்காக, காணி, விவசாய அமைச்சினால் மேற்படி நிபுணர்களின் விவரத்தொகுப்பு ஒன்றினைத் தயாரிக்க வேண்டியுள்ளது.

அரசாங்கத் திணைக்களங்கள், சபைகள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றில் கடமையாற்றுவோரிடம் இருந்தும், அரச சேவையில் இல்லாதோரிடமிருந்தும் இதற்கான விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

**நிபுணத்துவத்தின் விபரம்:**

01. காணியும் நீர்ப்பாவனையும்.
02. காணி அபிவிருத்தி.
03. வன முகாமைத்துவம்.
04. மரப் பாவனை.
05. விவசாயம்.
06. மணல் விஞ்ஞானம்.
07. விவசாயப் பொருளியல்.
08. விவசாயப் பொறியியல்.
09. தோட்டக் கலை.
10. விஞ்ஞான ரீதியான விவசாயம்.
11. பண்ணை முகாமைத்துவம்.
12. நீர்வளப் புவியியல்.
13. கால்நடை வளர்ப்பு.
14. கோழிப்பண்ணை முகாமைத்துவம்.
15. பால்பண்ணை முகாமைத்துவம்.

விண்ணப்பதாரிகள் தங்களது சொந்த விபரங்களைக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

செயலாளர்,
காணி விவசாய அமைச்சு,
மாகாண சபைச் செயலகம்,
திருக்கோணமலை.

விண்ணப்ப முடிவு திகதி: 25 – 04 – 1989.

விண்ணப்பங்கள் யாவும் கிடைத்தமை பற்றி அறிவிக்கவும். இரண்டு கிழமைக்குள் விண்ணப்பம் கிடைத்தமை பற்றி அறிவித்தல் கிடைக்காது போயின், விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பத்தின் பிரதி ஒன்றினை அனுப்பிவைத்தல் வேண்டும்.

செயலாளர்
மாகாண சபைச் செயலகம், காணிவிவசாய அமைச்சு.
திருக்கோணமலை.
(C/1966)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### செல்வி ச. நிரஞ்ஜினி

தோற்றம்: 1982- 02- 26
மறைவு: 1989- 02- 19

முப்பத்தொரு நாட்கள் சென்றதம்மா நிரஞ்ஜினி எம்வீட்டு ஒளிவிளக்கு அணைந்ததம்மா! எம் இல்லம் இருள் சூழ்ந்து விட்டதம்மா! அன்புமொழி பேசி அணைத்திட்ட நாட்கள் வெறும் கனவாக பிஞ்சு முகம் காணாது உன் மழலைமொழி கேளாமல் பேதலித்து நிற்கின்றோம்;

உன் பிரிவுத்துயரில் வாடும்;
அப்பா, அம்மா, அக்கா, அண்ணன்மார்,
மற்றும் உறவினர்கள்.

ஏழாலை மத்தி.
(10359)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யா மொழி

**குறள்:-**

ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்
போற்றலு ளெல்லாம் தலை.

**பொருள்:-**

பத்திரப்படுத்த விரும்புகிறவர்கள் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டிய எல்லாவற்றிலும் தலைசிறந்த பொருள் தம்மினும் வல்லமையுள்ளவர்களுடைய திறமையைத் தவறவிடாமை.

உதயன்

உண்மை - விழிப்புணர்வு - உரிமை

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22073
21 - 03 - 1989 த. பெ. இல: 23

# வேண்டாம் இந்த அரசியல்!

தமிழ்நாடு அரசியலில் கடந்த இரண்டு நாட்கள் பெரும் அரசியல் 'கலகம்' ஒன்று உருவாக்கப்பட்டது. நேற்றுக் காலையில் அது தணிக்கப்பட்டு விட்டாலும், ஜெயலலிதா விவகாரம் தமிழ்நாட்டு அரசியலில் ஒரு கலக்குக் கலக்கியது என்றே சொல்லலாம்.

முன்னாள் திரையுலகத் தாரகையும், இந்நாள் அரசியல் நட்சத்திரமுமான செல்வி ஜெயலலிதா தமது எம். எல். ஏ. பதவியை இராஜினுமாச் செய்தாரா? அதன் மூலம் எதிர்க்கட்சித்தலைவி பதவியையும் துறந்து, அரசியலில் இருந்து ஒதுங்கிவிட்டாரா?

இந்த விவகாரம் இரண்டு நாட்களாகத் தமிழகத்தைப் பரபரப்படையச் செய்தது என்பது ஒருபுறம். தமிழக அரசியல் இந்தளவு கீழ்மட்டத்துக்குப் போய் விட்டதா என்று உலகின் பல பாகங்களிலும் வாழும் தமிழர்கள் வெட்கத்துடனும், வேதனையுடனும் கேட்கும் நிலையையும் உருவாக்கி விட்டது.

ஒரு எம். பி. அல்லது எம். எல். ஏ. அல்லது வேறு எந்த மக்கள் பிரதிநிதியும் தமது பதவியில் இருந்து விலகிக் கொள்வது சனநாயகக் கட்டமைப்பில் சாதாரணமானது. அரசியல் தலைவர் ஒருவர் அரசியலில் இருந்து ஒதுங்கிக் கொள்ள விரும்பினுல் அதுவும் பெரிது படுத்தி ''அமர்க்களம்'' படுத்தக் கூடிய ஒன்றல்ல.

ஆனுல் இங்கே, செல்வி ஜெயலலிதா விவகாரத்தில் அவரது இராஜினுமாக் கடிதம், அவரது சொந்தக் கையொப்பத்துடன் சபாநாயகருக்குக் கிடைத்திருக்கிறது.

தான் அந்தக் கடிதத்தை அனுப்பவில்லை என்பதும்—

ஒரு வாரத்துக்கு முன்னர் எழுதிய அந்தக் கடிதத்தை அனுப்புவதில்லை என்று முடிவுசெய்து மனதை மாற்றிய பின்னர், இரண்டாமவர் தூண்டுதலுடன் அந்தக் கடிதம் சபாநாயகருக்கு அனுப்பி வைக்கப்பட்டது என்பதும் — செல்வி ஜெயலலிதாவின் நிலைப்பாடு.

அந்த இரண்டாமவர் அரசாங்கத் தரப்பும், அதற்குத் துணைபோகும் பொலீஸ் துறையும் தான் என்பது செல்வி ஜெயலலிதாவின் குற்றச்சாட்டு.

இல்லை, இல்லை அரசாங்கக் கட்சியான தி.மு.க.வுக்கோ, தனக்கோ இதில் எவ்வித சம்பந்தமும் இல்லை என்கிறுர் முதல்வர் கருணுநிதி. பொலீஸ் பகுதித் தலைவரும் அதே ராகத்தையே வாசித்திருக்கிறுர்.

செல்வி ஜெயலலிதா இராஜினுமாக் கடிதம் ஒன்றை எழுதும் அளவுக்கு அ. தி. மு. கட்சிக்குள் கருத்து வேறுபாடு தோன்றி இருக்குமானுல் —

செல்வி ஜெயலலிதா மனம்மாறிய பின்னரும், அவரது முந்திய (இராஜினுமாக்) கடிதத்தை அவரது கட்சிக்குள் இருக்கும் ஒரு கருங்காலியே சபாநாயகருக்கு அனுப்பி இப்படிக்காலை வாரிவிட முடியாதா என்பது முதல்வரின் வாதம்.

வாதங்களும், பிரதிவாதங்களும் எப்படி அமையினும், இராஜினுமாக் கடிதம் யாரால், எவரது அனுசரணையுடன் சபாநாயகர் கைக்குப் போய்ச் சேர்ந்தது என்ற சரியான விவரம், உண்மை, தெரியும்வரை குற்றவாளி யார் என்பதை நிர்ணயிக்க முடியாது.

குற்றம் அல்லது தவறு எதிர்க்கட்சி தரப்பில் இருந்தாலும் சரி, அரச தரப்பில் இருந்தாலும் சரி, அவர்கள் கண்டிக்கப்பட வேண்டியவர்கள்.

தமிழக அரசியல் கபடமும், சூழ்ச்சியும் நிறைந்த, தரம் குறைந்த, தரம்கெட்ட இழிநிலை இயல்பினது என்பதை உருவாக்கிய குற்றம் இருசாராரையுமே சார்ந்து கொள்ளும்.

அரசாங்கத் தரப்பு, குற்றவாளியாகக் காணப்படுமானுல், அது அதிகாரத் துஷ்பிரயோகம், கழுத்தறுப்பு அரசியல் என்பனவற்றுக்குத் துணைபோகும் கனவான் தனமில்லாத, மோசடி நிறைந்ததான, தமிழக அரசியலுக்கு ஊட்டம் அளித்ததாக முடியும்.

எதிர்க்கட்சித் தரப்பு, குற்றவாளியாகக் காணப்படுமானுல், வேண்டாத ஒரு விவகாரத்தைப் பெரிது படுத்தி, தமிழக அரசியலுக்கு கறைபூசி அதனை மாசுபடுத்திய சிறுபிள்ளைத்தனமாகும்.

எது எப்படியோ, ஒரு சிறிய விவகாரத்தில் இவ்வளவு கலகமும், குழப்பமும், குட்டையைக் கிளறுதலும், மோசடியும் நடக்குமானுல், வெளிநாடுகளில் (ஏன் இந்தியாவின் ஏனைய மாநிலங்களில்) தமிழக அரசியல் பற்றிய 'இமேஜ்' எப்படி இருக்கும் என்பதை தமிழக அரசியல்வாதிகள் அனைவரும் நினைத்துப் பார்க்க வேண்டும்.

ஆறு கோடி தமிழர்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் அரசியல் இந்தளவு மூன்ருந்தர நிலைக்குத் தள்ளப்பட வேண்டுமா என்று வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் வேதனை அடைவார்கள்; வெட்கப்படுவார்கள் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அகில உலகிலும் உள்ள தமிழர்களுக்கு முன்மாதிரியாக, முன்னேடியாக, நல்ல வழிகாட்டியாக விளங்க வேண்டிய தமிழகமும் அதன் அரசியல் தலைவர்களும் இந்நிலைக்குப் போவது வெறுக்கத்தக்கதாகும்.

## தாய் பிரதமர் சீன விஜயம்

பீகிங், மார்ச் 20

வியட்னுமின்ஆதரவு பெற்ற கம்பூச்சியாவின் நொம்பவுன் அரசாங்கத்தை அங்கீகரிப்பது பற்றி தாய்லாந்து அரசு இன்னமும் முடிவு செய்யவில்லை என்று அறுவிக்கப்பட்டிருக்கிறது.

தாய்லாந்துபிரதமர்சாற்றிச்சாய் ஷின்ஹவன் சீனப்பிரதமர் லி பெங்கிடம் இத்தகவலைத் தெரிவித்தார்.

திரு. பொங்கை தாய்லாந்து பிரதமர் சந்தித்த போது கம்போடிய புரட்சித் ,தலைவர் நொரொடம் சிஹனுக்கான தனது ஆதரவு தொடர்ந்து இருக்கும் என்று உறுதியளித்தார். (எ)

★ கிறிஸ்டின் கீலர் விவகாரம் போன்று

# பிரிட்டனில் பாலியல் உளவுமோசடி விசாரிக்க பிரதமர் தாட்சர் உத்தரவு

லண்டன், மார்ச். 20

பிரிட்டிஷ் அரசியலில் மீண்டும் ஒரு பாலியல் மோசடிச் சம்பவம் அம்பலமாகியிருக்கிறது.

இதுபற்றி பூரண விசாரணை ஒன்று நடத்தும்படி பிரதமர் திருமதி மார்கரட் தாட்சர் நேற்று உத்தரவிட்டிருக்கிறுர்.

பாலியல் சம்பந்தப்பட்ட

### சம்பந்தப்பட்டிருப்பவர் 'மிஸ் இந்தியா' பமேலா

இந்த உளவு மோசடியில் சம்பந்தப்பட்டிருப்பவர் 27 வயதான செல்வி பமேலா போர்டஸ்.

இந்தியாவில் நடந்த அழகுராணிப் போட்டி ஒன்றில் 'மிஸ் இந்தியா' வாகத் தெரிவு செய்யப்பட்டவர்.

பிரிட்டிஷ் அரசின் உயர்மட்ட அமைச்சர்கள், எம். பிக்கள், பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் ஆயுத விற்பனையாளர்களுடன் செல்வி பமேலா தொடர்பு வைத்திருந்ததாக தெரிய வந்திருக்கிறது.

இதை செல்வி பமேலாவே ஒப்புக்கொண்டிருக்கின்றுர்.

1960களில் அழகி கிறிஸ்டீல் கீலரின் பாலியல் தொடர்பு நடவடிக்கைகளில் அப்போதைய யுத்த மந்திரி புறொபியூமோ பதவி இழந்தார்.

அதிலும் பார்க்க மிக மோசமான உளவு மோசடிச் சம்பவமாக 'மிஸ் இந்தியா' வான பமேலாவின் தொடர்புகள் அமைந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசு எம்பியான திரு. டேவிட் ஷோவின் உதவியாளர் என்ற முறையில் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்திற்குள் சுதந்திரமாக நடமாடி வந்த செல்வி பமேலா இந்த மோசடி வெளியானதைத் தொடர்ந்து தலைமறைவாகி விட்டார். தலைமறைவாக இருந்து கொண்டு பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில் ''பிரிட்டிஷ்அரசாங்கத்தையே பதவி கவிழ்க்கக் கூடிய அளவு பாதுகாப்பு ரகசியங்கள் என்னிடம் உள்ளன. நான் பகிரங்கமாகப் பேசினுல் பிரிட்டனே ஸ்தம்பிக்கும் என் முன்னுல் கிறிஸ்டின் கீலர் சம்பவம் ஒரு தூசு''! என்று கூறியிருக்கிறுர்.

ரகசியங்களை வெளியிடுவதானுல் லட்சக்கணக்கில் பணம் தரப்படவேண்டும் என்றும் செல்வி பமேலா லண்டன் பத்திரிகைளுக்கு அறிவித்திருக்கிறுர். (எ)

## ஜலலபாத்தில் அமெரிக்கரும் மரணம்

காபூல், மார்ச்20

ஜலலபாத் சண்டையின் போது நான்கு அமெரிக்க இராணுவ ஆலோசகர்கள் அரசுப் படைகளின் தாக்குதலில் உயிரிழந்தனர் என்று காபூல் வானொலி அறிவித்தது.

கொல்லப்பட்ட 560 கெரில்லாக்களில் சவூதி அரேபியர் ஒருவரும் கொல்லப்பட்டார் (எ)

## ஹெலிக்கொப்டர் விபத்து; 21 பேர் பலி

சோல் மார்ச் 20

அமெரிக்க கடற்படை வீரர்கள் 21 பேர் நேற்று தென் கொரியாவில் இடம் பெற்ற ஹெலிக்கொப்டர் விபத்து ஒன்றில் உயிரிழந்தனர்.

13 பேர் காயமடைந்தனர். (எ)

## எல்சல்வடோரில் வன்செயல் இருபது பேர் மரணம்!

சான்சல்வடோர், மார்ச் 20

எல்சல்வடோரில் ஜனுதிபதித் தேர்தல் அன்று நடந்த மோதல்களில் 5 அரசுப் படையினர் 3 பத்திரிகையாளர் உட்பட 20 பேர் கொல்லப்பட்டனர்.

பத்திரிகையாளர்களில் ஒருவர் ராய்ட்டர்செய்தி ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்.

நாட்டின் 20 நகர்களில் இடதுசாரிக் கெரில்லாக்கள் அரசுப்படையினர் மீது தாக்குதலை நடத்தினர். அப்போதே 5 படையினர் கொல்லப்பட்டனர்.

அரசுப்படையினர் ஹெலிக்கொப்டர்கள் மூலம் நடத்திய எதிர்த்தாக்குதல்களில் காரில் பயணம் செய்து கொண்டிருந்த பத்திரிகையாளர்கள் உயிரிழந்தனர். (எ)

## 'டிஸ்கவரி' விண்கப்பல் பூமிக்குத் திரும்பியது!

கலிபோர்னியோ, மார்ச்.20

அமெரிக்கா கடந்த வாரம் அனுப்பிய 'டிஸ்கவரி' விண்வெளிக்கலம் நேற்று கலிபோர்னியோ, கேக்ப்னவரல் தளத்தில் தனது பயணத்தை முடித்துக்கொண்டு வந்திறங்கியது.

ஐந்து விண்வெளி வீரர்கள் இக் களத்தில் சென்றிருந்தனர்.

வானவெளியை இக் கலம் 80 தரம் சுற்றியது. 2 கோடி மைல்களுக்கு மேல் அப் பயணம் அமைந்தது.

தொலைத் தொடர்பு சாதனச் செயற்கைக் கோள் ஒன்றையும் 'டிஸ்கவரி' வானில் பறக்கவிட்டது.

விண்கலப் பயணங்களின் போது தங்குதடையின்றி தொடர்புசாதனங்கள் இயங்க இச் செயற்கைக் கோள் உதவும்.

இவ் விண்கலத்தில் ஆராய்ச்சிப் பணிகளுக்காக எலிகளும் கோழிக்குஞ்சுகளும் அனுப்பி வைக்கப்பட்டன.

அமெரிக்க நாஸா நிறுவனம் இன்னெரு விண்கலத்தை ஆராய்ச்சிப் பணிகளுக்கு வருகிற ஏப்ரல் இறுதியில் வானவெளிக்கு அனுப்பும். [எ]

## அ.தி.மு.க.வங்கிக் கணக்கு பொலீஸாரால் சீல் வைப்பு

சென்னை, மார்ச் 20

அ தி.மு. க. வங்கில் கணக்கு பொலீஸாரால் சீல் வைக்கப்பட்டது.

இத்தகவலை சென்னை பொலீஸ் கமிஷனர் பி. துரை தெரிவித்தார்.

அ. தி. மு. க. சார்பில் போட்டியிடுவதற்காக பணம் கொடுத்தவர்களில் சிலருக்கு பணம் திருப்பிக் கொடுக்கப்படவில்லை என்று வந்தபுகார்களைத் தொடர்ந்தே அ. தி. மு. க. வின் வங்கிக் கணக்கு முடக்கப்பட்டதாக திரு. துரை தெரிவித்தார். (எ)

சபாநாயகருக்கு கடிதம்

## இராஜினுமா செய்யவில்லை என ஜெயலலிதா அறிவிப்பு

சென்னை, மார்ச் 20

அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா, தமிழக சட்டசபைச் சபாநாயகர் தமிழ்க்குடிமகனுக்கு விளக்கம் அனுப்பியிருக்கிறுர்.

எம். எல். ஏ. பதவியை நான் இராஜினுமாச் செய்யவில்லை; அரசியலில் இருந்து ஒய்வு பெறுவதாக அறிவிக்கவும் இல்லை' — என்று செல்வி ஜெயலலிதா சபாநாயகருக்கு நேற்று எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறுர்.

ஜெயலலிதா இராஜினுமாச் செய்து சபாநாயகருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியதைத்தொடர்ந்து,ஏற்பட்ட பிரசினையைத் சபாநாயகர், ஜெயலலிதாவிடம் விளக்கம் கேட்டிருந்தார்.

# சமுதாய நோக்கிலே சிந்தித்து செயற்பட வேண்டும்

### ''வரவு'' நூல் வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், மார்ச். 21

நாம் கல்வியை இதுவரை காலமும் தொழில் தேடும் நோக்குடனேயே கற்றுவந்தோம். எமது கல்வி முறையும் இதைத் தழுவியே அமைக்கப்பட்டிருந்தது. இன்று சமுதாய நோக்கிலே நாம் சிந்தித்துச் செயல் பட வேண்டும். நாம் எமது சமூக உயர்ச்சிக்கு என்ன செய்தோம் என்பதை ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும்.

யாழ் இந்துக் கல்லூரி வணிகத்துறை மாணவர்களால் வெளியிடப்பட்ட ''வரவு'' என்ற நூலை வெளியிட்டு உரையாற்றுகையில் இக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கச் செயலாளரும் உள்ளூராட்சி மன்ற உதவி ஆணையாளருமான திரு.சு.டிவகலால மேற்கண்டவாறு கூறினுர்.

வணிக மன்றத் தலைவர் செல்வன் த. நகுலேஸ்வரன் இவ் வெளியீட்டு விழாவுக்குத் தலைமை வகித்தார்.

திரு. டிவகலால தனது உரையில் மேலும் கூறியதாவது:- எமது கல்லூரியிலிருந்து வெளியேறிய ஆயிரக்கணக்கான மாணவர்கள் சமூகத்தின் பல துறைகளில் முன்னணி வகிக்கின்றனர். இவர்களில் எத்தனை பேர் சமூகப் பற்றுள்ளவர்களாக சமூகத்துக்கு உதவுபவர்களாக இருக்கிறுர்கள். யாழ் இந்துக் கல்லூரி சமூக சேவைக்கு என்ன செய்தது என்ற வினுவுக்கு எமது விடை செலவிலும் பார்க்க வரவு கூடியதாய் இருக்குமாயின் நாம் பெருமைப்பட இடமுண்டு.

அவ்வாறில்லாமல் எமது வரவு குறைவாகக் காணப்படின் நாம் எம்மைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

நாம் பல்கலைக்கழகத்தில் படித்தகாலத்தில் மருத்துவம், பொறியியல், விஞ்ஞானதுறைகளில் பட்டப்படிப்பு மேற்கொண்டவர்கள் தாம் கலைத்துறை மாணவர்களிலும் பார்க்க ஒரு படி கூடியவர்கள் என்ற நினைவுடன் நடந்து வந்தார்கள். அந் நிலைமை இன்னும் உண்டு என அறிகிறேன் இம் மனோநிலை சமுதாய பார்வை இல்லாத கல்வி முறையினுல் ஏற்பட்டது எனக் கூறினுர்.

நல்லூர் கல்வி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சி. சிவநாயகமூர்த்தி ஆசியுரை வழங்குகையில் 'யாழ் இந்துக் கல்லூரி பொறியியல் விஞ்ஞானத் துறைகளில் புகழ் பெற்ற கல்லூரியாக விளங்குகிறது. இப்பொழுது வணிகத்துறையிலும் மாணவர்களுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டு வருவது மெச்சத்தக்கது. அதேவேளையில் கலைத்துறைக்கும் ஊக்கமளிக்க வேண்டியது எமது பொறுப்பாகும்' எனக் கூறினுர்.

'வரவு' வணிக சஞ்சிகையின் முதல் பிரதியை சாமுவேல் அன் சன்ஸ் பிரதேச முகாமையாளர் திரு. இ. ஜெகேந்திரன் பெற்றுக்கொண்டார்.

சிறப்புப் பிரதியை உதயன்-சஞ்சீவி நிர்வாக இயக்குனர் திரு. ஈ. சரவணபவன் பெற்றுக் கொண்டார்.

யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விரிவுரையாளர்கள் திருவாளர்கள் க.தேவராஜன், ந. பேரின்பநாதன் ஆகியோர் ஆய்வுரை வழங்கினர் (ச)

## பஸ் மோதி காயமுற்ருர்

வட்டக்கச்சி, மார்ச். 21

பரந்தன் இரசாயன தொழிற்சாலையில் கடமைபுரியும் திரு. க. தியாகரத்தினம் என்பவர் (40 வயது) கொழும்பில் இருந்து வந்துகொண்டிருந்த தனியார் பஸ் ஒன்றினுல் மோதப்பட்டு காயத்துக்குள்ளானுர்.

இவர் கிளிநொச்சி மருத்துவ மனையில் [illegible] பட்டுள்ளார். (ச-163)

## மருத்துவபீடத்தில் கவியரங்கம்

யாழ்ப்பாணம், மார்ச். 21

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்கல் 1. 30 மணிக்கு கவியரங்கமும் பிற்பகல் 2. 30 மணிக்கு நாட[illegible] பெறும். (ச)

யாழ்ப்பாணம், பருத்தித்துறை

## குடும்ப அளவீட்டுப் படிவம் பெறுவதற்கு சமுகமளிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச். 21

இந்தியாவிலிருந்து கப்பல் மூலம் காங்கேசன்துறையில் வந்து இறங்கி இப்பொழுது யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் மீளக்குடி அமர்ந்தவர்களுக்கு யாழ் அரசாங்க அதிபர் வேண்டுகோள் ஒன்று விடுத்துள்ளார்.

இவர்களில் ஏற்கனவே வழங்கப்பட்ட குடும்ப அளவீட்டுப் படிவம் பெறத் தவறிய குடும்பங்களின் தலைவர்கள் மட்டும் பின்வரும் ஆவணங்களுடன் தத்தமது உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் சமுகமளிக்க வேண்டும்.

தனி நபராயின் தந்தை அல்லது தாயுடன் செல்ல வேண்டும். செல்லத்தவறின் மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது.

எடுத்துச் செல்ல வேண்டிய ஆவணங்கள் வருமாறு

1. பதிவு அட்டை. இது இந்திய அரசினுல் வழங்கப்பட்டது.

2. தேசிய அடையாள அட்டை. இது இலங்கை அரசினுல் வழங்கப்பட்டது.

3. அடையாள அட்டை. இது காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி யாழ் செயலகம் ஆகியவற்றில் புகைப்படம் எடுக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டவை.

4. அறிமுக அட்டை. இது கிராம சேவையாளரால் வழங்கப்பட்டது. இவ் அட்டை பெருவிட்டால் பெறவில்லை என உறுதிப்படுத்தும் கடிதம் கிராம சேவை அலுவலரிடம் பெற்று வரவேண்டும்.

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்கள் 25 ஆம் திகதி சனிக்கிழமை யாழ் ஒஸ்மானியாக் கல்லூரியில் சமுகமளிக்க வேண்டும்.

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்கள் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் சமுகமளிக்க வேண்டும். (ச)

### சமய சந்நிதிகளில்

## இன்று கட்டுடை விநாயகர் தேர்

மானிப்பாய், மார்ச் 21

மானிப்பாய் மேற்கு கட்டுடை அரசடி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவ விழா இம்மாதம் 15 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றது.

இன்று 21 ஆம் திகதி காலை 10 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் புதன்கிழமை பகல் 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும். (ச-90)

## மகிழடிவைரவர் கோயிலில்

கோப்பாய், மார்ச். 21

நாளை 22ஆம் திகதி புதன்கிழமை பங்குனி உத்தரத்தை முன்னிட்டு கோப்பாய் வடக்கு மகிழடி வைரவர் கோயிலில் விஷேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற உள்ளன. (இ- 72)

## கொற்றன்கட்டு ஞானவைரவர் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், மார்ச். 21

கந்தரோடை கொற்றன் கட்டு ஞானவைரவர் கோயில் மகாகும்பாபிஷேம் 23 ஆம் திகதி வியாழக்கிழமை பகல் 11 மணிக்கும் பிற்பகல் 1.30 மணிக்கும் இடையில் நடைபெறும்.

22 ஆம் திகதி புதன்கிழமை மாலை 6மணியிலிருந்து வியாழன் காலை 8 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தலாம். (ச)

## புளியம்பொக்கணை பொங்கல் விழா

யாழ்ப்பாணம், மார்ச். 21

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்தப் பொங்கல் நாளை 22 ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் 23 ஆம் திகதி பகல் வரை நடைபெறும்.

பொங்கலில் பங்குபற்றுவோர்களது வசதிக்காக யாழ்ப்பாணம், பருத்தித்துறை, காரைநகர், முல்லைத்தீவு, மன்னுர், வவுனியா, கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் இருந்து விசேட இ. போ. ச. பஸ் சேவைகள் நடைபெறும். (ச- 163)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



**வாடிக்கையாளர்களே!**

எம்மிடம் சொற்ப கையிருப்பே உள்ள **ஜோன்சன் (H P 10** வெளியிணை இயந்திரங்களை மலிவு விலையில் பெற்றுக் கொள்ள முந்துங்கள்!

**விலை: 28,500/- ரூபா**

ரேலர்மடி நூல், போயா வலை நூல் என்பனவும் உண்டு

**சென். அன்ரனீஸ்**

40, கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.



# உதயன்

21 - 03 - 1989 செவ்வாய்க்கிழமை



**ஜோன்சன் JOHNSON**


வெளியிணை இயந்திரங்களையும்,
உதிரிப்பாகங்களையும்
ரேலர் மடிநூல் ஃமில்லி மீற்றர், வலைநூல்,
போயா போன்ற கடற்றொழில்
உபகரணங்களையும்
மலிவு விலையில் வாங்க
எம்மை நாடுங்கள்!

**சென். அன்ரனீஸ்**

63, யூதாததேயு வீதி,
பாசையூர், யாழ்ப்பாணம்.


J, M, J.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



திருமதி

**அவுரும்பிள்ளை அனந்தாசி**

**(மாணிக்கம்)**

| அன்னையின் மடியில்: | ஆண்டவன் அடியில்: |
|---|---|
| 5 - 8 - 1918 | 19 - 2 - 198 |

எமது குடும்பத்தின் ஒளியாய் பாசத்தின் உறைவிடமாய் அன்பின் வழிகாட்டியாய் இருந்து வாழவைத்த தெய்வமே, அமரராகி 31-ம் நாள் ஆகினும் உங்கள் நினைவு எங்களை விட்டு அகலாது, உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல சின்னமடு செபமாலை மாதாவை பிரார்த்திக்கிறோம்,

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்புக் கணவன், அன்புச் சகோதரன், பெருமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

மாணிக்கம் வாசா,
சின்னமடு, வேலணை, 11040.

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னம்மா சண்முகம்

சங்கானை தேவாலய வீதியைச் சேர்ந்த திருமதி சின்னம்மா சண்முகம் அவர்கள் 20-3-89 ல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற தம்பினுதபிள்ளை சண்முகத்தின் அன்பு மனைவியும், தம்பையா, காலஞ் சென்ற கனகரத்தினம் (தபாலதிபர்) துரைசிங்கம் (U. S. A.) ஆகியோரின் அன்புத்தாயாரும், காலம் சென்ற சின்னத்துரை, அன்னம்மா, செல்வநாயகம் (மாக்கற் சங்கானை), தம்புசாமி (சீப்சைட் யாழ்ப்பாணம்) விசுவநாதன் (Malasiya) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ் சென்ற மகேஸ்வரி, மேர்சிலீலாவதி, விமலா ஆகியோரின் மாமியும், சந்திரவதனு, சிறீதரன், சாந்தி, சிருனிவிஞேலினி (U. K.) வரலக்குமி, வரராசன் (U. K.) பிரியதசன் (U. K.) ஆகியோரின் பேத்தியும், காயத்திரி, நிகரா, தனுஷா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21-3-89 செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. ச. தம்பையா
(மகன்)

தேவாலய வீதி,
சங்கானை.

[10128]

## 2 ஆம் பக்கத்திலும் மரண அறிவித்தல்கள்

2 ஆம் பக்கத்திலும்

## Obituary

### Rosalind Jeyamalar Kanapathipillai

Rosalind Jeyamalar Kanapathipillai beloved mother of Jeyamalini (Poppy) of Canada, sister of Jeyarajah, sister of late Jeyaranee Joseph, sister in-law of Indranee Jeyarajah, and late A. R. Joseph mother-in low of P. A. Chellatamby and loving grandmother of Arjuna & Aravind expired. Funeral service at 8-00 a. m. on Wednesday 22nd March 1989 and interment at St. John the Baptist hurch burial grounds.

Informant:
K. Jeyarajah

7, Som sundaram Avenue.
Jaffna.

(10141)

# ஜனசக்தி பயிற்சி வகுப்புக்கள்

## யாழ். மாவட்டத்தில் 9 ஆயிரம் பேருக்கு!

### யாழ். அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ் மாவட்டத்தில் உள்ள 14 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் உள்ள 9 ஆயிரம் பேருக்கு ''ஜனசக்தி'' பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளன.

யாழ். அரசாங்க அதிபர் திரு. எம், பஞ்சலிங்கம் இத் தகவலைத் தெரிவித்தார்,

யாழ். மாவட்டத்தில் ''ஜனசக்தி'' வறுமை ஒழிபுத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு ஆயிரத்து 800 சிறுகிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஒவ்வொரு கிராமத்திலும் இருந்து நான்கு உள்ளக முகவர்களும், ஒரு வெளியக முகவரும் நியமிக்கப்படுவர்.

இவ்வாறு நியமிக்கப்படுபவர்களுக்கே மேற்படி பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளன.

உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக நடைபெறவுள்ள பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொள்பவர்களுக்கு பிரயாணச் செலவாக 10 ரூபாவும் மதிய உணவு, தேனீர் என்பனவும் வழங்கப்படவுள்ளன.

பிரஸ்தாப பயிற்சி வகுப்புக்கள் 200 நிலையங்களில் நடைபெறவுள்ளன. இவற்றை ஏப்றல் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தி முடிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. [ஒ-5]

## அனாதைகளுக்கு ஆடைகள்:

### லண்டன் நிறுவனம் அன்பளிப்பு

அனாதைகளுக்கு வழங்கவென இங்கிலாந்தில் உள்ள 'அனாதைகள் நம்பிக்கை நிறுவனத்தி'னால் ஆடைகள் வழங்கப்பட்டுள்ளன.

சுமார் 6 லட்சம் ரூபா பெறுமதியான மேற்படி ஆடைகளை விநியோகிக்கும் பணியை யாழ். ரோட்டறிக் கழகம் பொறுப்பேற்றுள்ளது.

யாழ். ரோட்டறிக் கழக அதிகாரி ஒருவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

பிரஸ்தாப நிறுவனத்தினால் வழங்கப்பட்ட மேற்படி ஆடைகள் யாழ்ப்பாணம் கொண்வரப்பட்டுள்ளன. [ஒ-5]

## புற்றளையில் தேடுதல்; 3 இளைஞர்கள் மரணம்

வல்வெட்டித்துறை, மார்ச் 21

கடந்தஞாயிறன்றுபருத்தித்துறை, புற்றளைப் பகுதியில் இந்திய அமைதிப் படையினர் தீவிர தேடுதலில் ஈடுபட்டனர்.

தேடுதலின் போது மூன்று இளைஞர்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்கள்.

1. கனகவேற்பிள்ளை ஹரிகரன் [19 வயது - பருத்தித்துறை] 2. நடேஸ் சிவதாசன் [20 வயது -புலோலி] 3. பவானந்தன் சரவணபவான் [உபயகிராமம்] என்பவர்களே அந்த மூவருமாவர்.

மூவரது சடலங்களும் மந்திகை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டு, கிராம சேவையாளர் திரு. ஏ. ஞானச்சந்திரன் முன்னிலையில் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. [ஒ-160]

## எல்சல்வடோர் புதிய ஜனாதிபதி

சான்சல்வடோர், மார்ச் 21

எல்சல்வடோர் ஜனாதிபதியாக வலதுசாரி ஆறனு கட்சியின் வேட்பாளர் திரு. அல்பிரடோ கிறிஸ்டியானி தெரிவு செய்யப்பட்டார். இவருக்கு 54 ச்தவீத வாக்குகள் கிடைத்தன.

தோல்வி கண்ட கிறிஸ்தவ ஜனநாயகக்கட்சி, திரு. கிறிஸ்டியானியின் வெற்றியை இன்னும் ஏற்கவில்லை. (ஒ-எ)

## அனுமதி இன்றி வீடியோ படம் காட்டுவோர் மீது நடவடிக்கை

### மினி சினிமா சங்கப் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச். 21

யாழ் மாவட்ட மினிசினிமா சங்கத்தின் அனுமதி பெறுமல் வீடியோ படம் காண்பிப்பது யாழ் மாவட்டத்தில் முற்ருகத் தடை செய்யப்பட்டுள்ளது.

மீறுபவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ். மாவட்ட மினி சினிமா சங்கத்தினர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சங்கத்தில் அங்கத்துவம் பெற்று மினி சினிமா அனுமதிப் பத்திரம் பெருத பலரால் ஆங்காங்கே கட்டணம் பெற்று சினிமா காட்டப்படுவதாக முறையிடப்பட்டுள்ளது.

அவ்வாருக கட்டணம் பெற்று சினிமா காட்டுவது, மினி சினிமா சங்கத்தின் கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் மீறும் செயலாகும்.

எனவே அவ்வாருக சினிமா காட்டுவோர் கண்டு பிடிக்கப்படும் பட்சத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது, (இ - 9)

## பல்கலைக்கழகத்தில் நாளை கூட்டம்

யாழ்ப்பாணம் மார்ச் 21

யாழ் பல்கலைக் கழக இரண்டாவது வருட பெளதிக விஞ்ஞான மாணவர்களின் பொதுக் கூட்டம் நாளை புதன்கிழமை காலை 10 மணியளவில் பல்கலைக் கழகத்தில் நடைபெறவுள்ளது.

நடைபெறவுள்ள பரீட்சை பற்றிஇக்கூட்டத்தில்ஆராயப் படவுள்ளதாக மாணவப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார், (ஓ - 5)

## வான் - லொறி விபத்து

குருநகர், மார்ச் 21

நேற்றுக் காலை யாழ் - பண்ணை வீதியில் பயணிகள் வான் ஒன்று லொறியுடன் மோதிக் கொண்டதில் பலத்த சேதத்திற்கு உள்ளானது.

எனினும் தெய்வாதீனமாகப் பயணிகள் எவரும் காயம் அடையவில்லை. [ஒ-51]

## மாகாண அமைச்சர்களின் செயலாளர்கள்

யாழ்ப்பாணம் மார்ச் 21

யாழ் செயலக தலைமைப் பீட உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய திரு, கே, கோபாலரத்தினம் வடக்கு - கிழக்கு மாகாண அரசின் பொது நிர்வாக உள்ளுராட்சி அமைச்சின் செயலாளராக நியமனம் பெற்றுள்ளார்,

வடகிழக்கு மாகாணசபையின் நீர்ப்பாசன வீடமைப்பு நீர்வள அமைச்சின் செயலாளராக திரு. கே. என். ரகுநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். (ஒ-510)

## யாழ்., திருகோண----

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அந்த அதிகாரி சொன்னார்.

எனினும் தனியார் நிறுவனங்களுக்குத் தொலைபேசி இணைப்புகள் வழங்கப்படும் போது முந்திய தொலைபேசிக் கட்டண நிலுவைகள் முற்ருகச் செலுத்தப்பட்டுவிட்டனவா என்பது உறுதிப்படுத்தப்படும் எனவும் அந்த அதிகாரி தகவல் தந்தார். (அ-9-10)

## 77 பேர் மீது வழக்குத் தாக்கல்

மாலே, மார்ச் 21

மாலைதீவு சதி முயற்சி வழக்கில் 3 மாலைதீவு வர்த்தகர்கள், 4 தேசியக் காவல் படை வீரர்கள் மற்றும் 2 மாலைதீவு வாசிகளும், 68 இலங்கைப் பிரஜைகளும், கூலிப்படையினர் என்ற முறையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர். [ஒ-எ]

## தண்ணீரூற்றில் மின்கம்ப மரண தண்டனை!

முல்லைத்தீவு, மார்ச்21

தண்ணீரூற்று நெடுங்கேணிச்சந்தியில் இருமின்கம்பங்களில் இருவர் கட்டப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றது.

கொலையுண்டவர்களில் ஒருவர் முல்லைத்தீவு, சிலாவத்தை கிராமசேவை உத்தியோகத்தர் ச. திருநாவுக்கரசு என்றும் மற்றவர் மாமூலைவாசி என்றும் தெரிவிக்கப்பட்டது, (ஒ-92)

## குடத்தனைப்----

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாறு:-

1. பீலிஸ் வில்வம் [வயது 22], மணற்காடு.
2. அருமைத்துரை ரவீந்திரன் [வயது 17], குடத்தனை.
3. எஸ். ஞானச்சந்திரன் [வயது 26], துன்னாலை.

இச்சம்பவத்தை அடுத்து இப்பகுதியில் அமைதிப் படையினர் தேடுதலில் ஈடுபட்டனர். (ஒ-160)

## டாக்டரை கட்டி வைத்துக் கொள்ளை

யாழ்ப்பாணம் மார்ச் 21

மஸ்கெலியா அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரியின் இல்லத்துக்கு இரவு 8மணி அளவில் சென்ற சில இளைஞர்கள் டாக்டரை பலவந்தமாகக் கட்டி வைத்து விட்டு ரீ. வி. டெக், ரேடியோ, தங்க நகைகள் போன்ற முக்கிய பொருள்களை கொள்ளைக் அடித்துச் சென்றனர். (இ-58)

## சங்காபிஷேகம்

கரவெட்டி மார்ச் 21

கரவெட்டி சிந்தாமணி விஞயகர் ஆலய வருடாந்த சங்காபிஷேகம் 23 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறும். (க-70)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவபாக்கியவதி சிவராஜசிங்கம்

திருமதி சிவபாக்கியவதி சிவராஜசிங்கம் காலமாகிவிட்டார். இவர் சிவராஜசிங்கத்தின் (சிங்கம் ஓவசியர்) அன்பு மனைவியும், நரேந்திரசிங்கம் (மே. ஜேர்மனி), கஜேந்திரசிங்கம் (பிரான்ஸ்), அகிலாண்டேஸ்வரி (பிரான்ஸ்). அமிர்தகெளரி, பத்மராணி, இலங்கராணி (தொலைத்தொடர்புத் திணைக்களம்), தாம்பிரவரணி, அமிர்தகாந்தி, மங்களேஸ்வரி (பிரான்ஸ்), திருக்கேஸ்வரி (பிரான்ஸ்), தசவதி, கோணேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், கைலைநாதன் (France), குணசேகரம் (Valuation Dept. Colom'o), கோபாலச்சந்திரநாயகம் (இலங்கைவங்கி, முல்லைத்தீவு), வரதகேயன் (தொலைத்தொடர்புத் திணைக்களம் யாழ்.), உலகநாதன், காலஞ்சென்ற சரோஜினிதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். இறுதிச் சடங்குகள் பூவோடை மயானத்தில் (21-3-89) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு. க சிவராசசிங்கம்
(கணவன்)

மல்வம்,
உடுவில்.

[10130]

### திருமதி முருகுப்பிள்ளை வள்ளிப்பிள்ளை

வத்தனை, புலோலி மேற்கு பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி முருகுப்பிள்ளை வள்ளிப்பிள்ளை காலமானார்.

இவர் ஸ்ரீவள்ளி ஸ்ரோர்ஸ் உரிமையாளர் வி. க. முருகுப்பிள்ளையின் அன்பு மனைவியும் திரு. மு. கார்த்திகேசு (தபால் அதிபர்), மு. தர்மலிங்கம் (சமூகசேவை அலுவலர்), மு. சோமசுந்தரம் (பொறியியலாளர்), மு. வயிரமுத்து, மு. திருநாவுக்கரசு, குழந்தைநாயகி, பத்மராணி, தனபாக்கியம், சரோஜினிதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், கோ. சுப்பையா, மு. இராசையா, சி. சிவஞானசுந்தரம் ஆகியோரின் அன்பு மாமியுமாவார். தகனக்கிரியைகள் 21-03-89 செவ்வாய் பி. ப. 3-00 மணியளவில் நடைபெறும். உற்ருர், உறவினர் நண்பர்கள் தயவுசெய்து இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்,

தகவல்:
மு. கார்த்திகேசு

வத்தனை,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

(10127)

### திருமதி பகவதி ரவீந்திரநாதன் (B.A)

(ரதி)

(ஆசிரியை, ஏருவூர் மகாவித்தியாலயம்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக்கொண்டவரும், ஏருவூரை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி பகவதி ரவீந்திரநாதன் 19.3.89இல் காலமானர். இவர் ஏருவூர் மகாவித்தியாலய ஆசிரியையாவார்,

இவர் ரவீந்திரநாதன்(அமெரிக்கா) அவர்களின் அன்பு மனைவியும், திரு.சின்னத்துரை மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகளும், திரு. நவரெட்ணராஜா [சரவணாஸ் உரிமையாளர், கிளிநொச்சி), புஸ்பராசா [ரெக்னிக்கல் எஞ்சினியர், ஓமான்), சண்முகராஜா [லக்கி ரியூசன் சென்ரர் உரிமையாளர்,ஏருவூர்], உதயராசா (பரடைஸ் உரிமையாளர், வவுனியா), பத்மாவதி[ஆசிரியை, மகாவித்தியாலயம், ஓமந்தை], பராசக்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பேரின்பநாதன் (ஆசிரியர், மகாவித்தியாலயம் அடம்பன்], செல்வநாயகம்[குவைத்] ஆகியோரின் அன்புமைத்துனியும், சுரேந்திரன், சுதர்சனு, சுதர்சன், சுசிகரன், கவிதா, கார்த்திகா ஆகியோரின் அன்புச் சித்தியும், ரஜீவனின் அன்பு மாமியுமாவார்.

இவ்வறிவித்தலை உற்ரூர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி தயவுடன் கேட்டுக் கொள்ளுகின்ருேம். ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்;
உதயன்.

கொட்டடி.

(10136)

### தையல்நாயகி நாகரத்தினம்

வட்டு கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்பொழுது ஒட்டுமடத்தில் வசிப்பவருமாகிய தையல்நாயகி நாகரத்தினம் (கண்ணம்மா) 20-3-89-ல் காலமானர். இவர் காலம்சென்ற நாகரத்தினத்தின் அன்பு மனைவியும் காலம் சென்ற சச்சிதானந்தன் (கொழும்பு இந்துக்கல்லூரி), நாகேஸ்வரி (சிங்கப்பூர்), அருளானந்தன் (கனடா), சிவானந்தன் (வோக்கஸ், கொழும்பு), நித்தியானந்தன் (சீமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை) ஆகியோரின் அன்புத் தாயாரும், யோகராணி (இளைப்பாறிய ஆசிரியர்), தேவசுந்தரராசா (சிங்கப்பூர்), ஞானசோதி (கனடா), யோகராணி (நாஷனல் அப்பிரண்டிஸ் போட்- கொழும்பு), தனலக்ஷ்மி ஆகியோரின் அன்பு மாமியாரும், வள்ளிநாயகி கனகரத்தினம், சரஸ்வதி இராசையா ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜயந்தி, நிறஞ்சன், தயாபரன், நிருபா, குமரன், ரமணன், தினேஷ், லக்ஷி ஆகியோரின் அருமைப் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கோம்பயன் மயானத்தில் 20-3-89 பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்ருர் உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா. நித்தியானந்தன்,
620, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(10131)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 392/2 இல் உள்ள அச்சகத்தில் 21 - 03 - 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org